கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடக்கு மாகாண சபை
සමුපකාර සංවර්ධන දෙපාතර්මේන්තුව,උතුරු පළාත් සභාව
**Department of Co-operative Development,**
**Northern Provincial Council**

முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.
වැඩිහිටියන් නිවාස සංකීර්ණය, නුවර පාර, කයිතඩි, යාපනය.
Elders' Home Complex, Kandy Road, Kaithady, Jaffna.

My No:- NP/15/04/02/CCD/CI

Date:- 2022.05.05

01/2022

சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினதும்,
சகல பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும்,
சகல இரண்டாம் படிச் சங்கங்களினதும்
தலைவர்கட்கு,

**சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், சகல பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், சகல இரண்டாம் படிச் சங்கங்களின் இயக்குநர் சபை உறுப்பினர்களுக்கும் பொதுச்சபை உறுப்பினர்களுக்குமான படிகளும், மற்றும் பிரயாணச் செலவுகளும்**

மேற்படி வடமாகாணத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், இரண்டாம் படிக் கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றின் இயக்குநர் சபைக் கூட்டங்களிற்கு கலந்து கொள்ளும் இயக்குநர் சபை உறுப்பினர்களின் படிகளும், பொதுச்சபை கூட்டங்களிற்கு கலந்து கொள்ளும் பொதுச்சபை உறுப்பினர்களுக்குமான (பேராளர்கள்) படிகளும், பிரயாணச் செலவுகளும் பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகின்றன.

1. **இயக்குநர் படி**

*1.1* இயக்குநர் சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக தலைவர் உள்ளிட்ட இயக்குநர் சபை உறுப்பினர்களிற்கு உணவுப்படிகள் உட்பட மாதமொன்றிற்கு உச்ச எல்லை ரூபா 1800/-ற்கு மேற்படாதவாறு, கூட்டமொன்றிற்கு ரூபா 600/-ற்கு மேற்படாத வீதத்திற்கிணங்க, ஆகக்கூடியது 3 கூட்டங்களிற்குரிய படியினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

*1.2* இப்படியினை பெற்றுக் கொள்வதற்கு தலைவர் உள்ளிட்ட இயக்குநர்கள் 2 மணித்தியாலங்களிற்கு குறையாமல் இயக்குநர் சபைக் கூட்டங்களிற்கு கலந்து கொள்ளல் வேண்டும்.

*1.3* இயக்குநர் சபைக் கூட்டங்களிற்கு கலந்து கொள்வதற்காக அவரால் பொது வாகனங்களில் பிரயாணம் செய்வதற்கு நேர்ந்த தொகையை பிரயாணச் செலவாக இயக்குநர் பெற்றுக் கொள்ள முடியும். சொந்த வாகனம் வைத்திருக்கும் இயக்குநர் ஒருவரிற்கு மோட்டர் சைக்கிளிற்கு 1 கிலோ மீற்றரிற்கு (1KM) : ஒரு வழிக்கு ரூபா 20.00 வீதமும் அல்லது கார் மற்றும் ஏனைய 4 சில்லு வாகனங்களிற்கு 1 கிலோ மீற்றரிற்கு (1KM) : ஒரு வழிக்கு ரூபா 40.00 வீதமும் பெற்றுக்கொள்ள முடியும். சொந்த வாகனம் வைத்திருக்கும் இயக்குநர் சபை உறுப்பினர் இவ்வாகனம் அவரது பெயரிலேயே பதிவையும், அனுமதிப் பத்திரத்தையும் கொண்டு இருப்பதை இயக்குநர் சபை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆணையாளர் කොමසාරිස් Commissioner | 021 205 7063 | உதவி ஆணையாளர் සහකාර කොමසාරිස් Asst. Commissioner | 021 227 1418 | கணக்காளர் ගණකාධිකාරී Accountant | 021 223 2212 | பொது පොදු Gen | 021 205 7064 |

தொலைநகல் ෆැක්ස් Fax 021 205 7062   E- Mail: - ccdnp@mail.com   Web: - np.gov.lk

2. பொதுச்சபை உறுப்பினர்கள் (பேராளர்கள்) படி
   2.1 மேற்குறித்த வகை கூட்டுறவுச் சங்கங்களின் பொதுச்சபை கூட்டங்களில் பங்குபற்றும் பேராளர்களுக்கு ரூபா 350/- படியொன்றினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மேற்படி திருத்தப்பட்ட படிகளின் ஏற்பாடுகளை உள்ளடக்கிய நடைமுறை விதிகள் பொதுச்சபையில் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே கொடுப்பனவுகள் செல்லுபடியாகும். இக் கொடுப்பனவு 01.05.2022லிருந்து நடைமுறைக்கு வருவதுடன், இத்திகதிக்கு முன்னர் வெளியிடப்பட்ட 04/2019 சுற்றுநிருபம் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

3. **இயக்குநர்கள் சங்கம் தொடர்பான விடயங்களில் கலந்து கொள்வதற்கான இணைந்த படிகளும், பிரயாணப்படிகளும்**
   3.1 சங்கம் தொடர்பான விடயங்களுக்காக சங்கத் தொழிற்பரப்பிற்கு வெளியே போக வர 12 கிலோ மீற்றரிற்கு அப்பால் 06 மணித்தியாலத்திற்கு மேல் 12 மணித்தியாலத்துள் செலவழிக்க நேரிடின் இணைந்த படி ரூபா 800/- இன் அரைப்பங்கினையும், 12 மணித்தியாலங்களிற்கு மேல் முழு இணைந்த படி ரூபா 800/- இனையும் 24 மணித்தியாலத்திற்கு மேற்படின் இணைந்த படியின் தொகைக்கு மேலதிகமாக 25% விசேட படியினையும் வழங்க முடியும். அத்துடன் பொதுப் போக்குவரத்திற்கான பிரயாணப் படியினையும் பெற்றுக்கொள்ள முடியும்.

M.N

**மு.நந்தகோபாலன்**
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வடக்கு மாகாண சபை

**பிரதி –**

1. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்
2. பணிப்பாளர், மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனம், வவுனியா